தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2017**

**C031** தமிழகப் பண்பாட்டு வரலாறு

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. எட்டுத்தொகை நூல்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
2. இசுலாம் என்பதன் பொருள் யாது?
3. பௌத்த இலக்கிய நூல் எது?
4. அஞ்சு வண்ணம் என்றால் என்ன?
5. பாரதிதாசன் குடும்ப விளக்கு என்று யாரைக் குறிப்பிட்டுள்ளார்?
6. தமிழர் பண்பாட்டில் வீழ்ச்சிக்குரிய மூன்று ஆசைகள் யாவை?
7. தமிழர்களின் வாழ்க்கையில் தலையாய குறிக்கோள் எது?
8. வீரநாராயணன் ஏரியை வெட்டியது யார்?
9. தமிழரின் புகழ் விருப்பத்தை விளக்குக.
10. வைதீக சமயம் என்பது யாது?
11. சிற்றூர் பண்பாட்டைக் காப்பாற்றப்படுபவர் யார்?
12. திருமணமாகாத இளைஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?
13. தாழிசைகளை எதற்குப் பயன்படுத்தினர்?
14. திருவாய்மொழி பாடியவர் யார்?
15. திரைப்படத்தைக் குறித்து பாமரன் என்ன கருதுகிறான்?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. பண்பாட்டு வாயில்களில் உணவு பற்றி எழுதுக.
2. ‘கலைமணம் கமழும் சிலம்பு’ சான்று காட்டி எழுதுக.
3. சமய நல்லிணக்கத்தைக் கிருத்துவர்களும் மற்றவர்களும் வளர்த்த நெறியைப் புலப்படுத்துக.
4. தமிழகத்தில் விடுதலை இயக்க விடிவெள்ளிகளான வ.உ. சிதம்பரனாரும் சுப்பிரமணி பாரதியும் திகழ்ந்தது எங்ஙனம்?
5. தமிழின் சொல் சிறப்புப் பற்றி எழுதுக.
6. மணிமேகலை காட்டும் பல சமயங்களைப் பற்றி எழுதுக.
7. இசுலாத்திற்கும் ஏனைய தமிழக சமயங்களுக்கும் இடையே அமைந்த ஒற்றுமையை எழுதுக.
8. நாயக்கர் கால வாழ்க்கை முறையில் ஆடவர் மகளிர் நிலை குறித்து எழுதுக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ் அறநூல்களில் திருக்குறள் போற்றும் அற வாழ்வு பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டு வரலாற்றை எழுத காசும் கல்வெட்டும் இடம்பெறும் நிலை குறித்து விவரிக்க.

2. (அ) சைவ, வைணவ சமயங்கள் வளர்த்த பண்பாடு குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கிய கால சமூகநிலை குறித்து எழுதுக.

3. (அ) பண்பாட்டு வளர்ச்சியின் இடர்பாடு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கோயில்களில் மடங்கள் பெறுமிடம் குறித்து விரித்து எழுதுக.

*** *